# காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை

## பகுதி II

14

1931-ல் யாழ்ப்பாணத்தில் வெற்றிகரமாக தேர்தல் புறக்கணிப்பை நடத்திய வாலிபர் காங்கிரசிடம் அடுத்த கட்ட நடவடிக்கைக்குரிய திட்டங்கள் எதுவும் இருக்கவில்லை. அவர்களது நடவடிக்கைகளை, அபாரம், பிரமாதம், இனவாதமற்ற முற்போக்கான நடவடிக்கை என்று தென்னிலங்கை சிங்கள அரசியல் வாதிகள் வெளிப்படையாகப் புகழாரம் சூட்டிய போதும் மறைமுகமாக அவர்கள் தமது பகுதிகளில் நடந்த தேர்தலுக்கு அமோக ஆதரவு தந்தனர்.

இந்தத் தேர்தலில் மொத்தமுள்ள 50 தொகுதிகளில் யாழ்ப்பாண மாவட்டத்திற்கான 4 தொகுதிகள் தவிர்ந்த மீதமுள்ள 46 தொகுதிகளுக்கு 37 சிங்களவர்களும், 3 இலங்கைத் தமிழர்களும், 2 இந்தியத் தமிழர்களும், 1 இஸ்லாமியரும், 3 பறங்கியர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

இக்காலகட்டத்தில் அரசியலில் குதித்த் ஜீ.ஜீ. பொன்னம்பலம் யாழ்ப்பாண வாலிபர் காங்கிரசின் தேர்தல் பகிஸ்கரிப்பு நடவடிக்கை தவறானது. அதனால் யாழ்ப்பாணத்தில் மறு தேர்தல் நடத்த வேண்டும் என்று தேசாதிபதியை கேட்டுக்கொண்டதன் பேரில் 1932-ம் ஆண்டு அங்கு மறு தேர்தல் நடத்தப்பட்டது. பருத்தித்துறைத் தொகுதியில் போட்டியிட்ட ஜீ.ஜீ. பொன்னம்பலம் அமோக வெற்றியீட்டினார். இந்தத் தேர்தலோடு யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் செயலிழந்து விட்டது. அதற்குப் புத்துயிரளித்து அதை ஒரு தேசிய விடுதலை இயக்கமாக நடத்துவதற்கு, அதன் தலைவர்கள் நம்பியிருந்தது போல் சிங்களத் தலவர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கவில்லை. அவர்கள் காலைவாரிவிட்டதால் இவர்கள் குப்புற விழுந்து விட்டார்கள்.

1936-ம் ஆண்டு டொனமூர் அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் நடைபெற்ற இரண்டாவது தேர்தலில் மொத்தமுள்ள 50 சட்ட சபைத் தொகுதிகளில் 39 சிங்களவர்களும், 8 இலங்கைத் தமிழர்களும், 2 இந்தியத் தமிழர்களும், 1 பறங்கியரும் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன் முதல்முதலாக தமிழர்களைப் புறக்கணித்து விட்டு ஒரு தனிச் சிங்கள மந்திரி சபையும் அமைக்கப்பட்டது.

இந்த மந்திரிசபையில் விவசாய அமைச்சராக இருந்த டி.எஸ் சேனநாயக்கா வரண்ட வலயக் குடியேற்றத் திட்டங்கள் என்ற பெயரில் தமிழர்களின் பாரம்பரியப் பிரதேசமான கிழக்கு மாகாணத்தில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை ஆரம்பித்து வைத்தார். அவர் ஒரு போதும் வெளிப்படையாக சிங்கள இனவாதம் பேசவில்லை. ஆனால் செயலில் தமிழர் தாயகத்தை துண்டாடும் விதத்தில் சிங்கள் குடியேற்றங்களை உருவாக்கி அக்குடியேற்ற வாசிகளுக்கு வேண்டிய பாதுகாப்பு, போக்குவரத்து முதலான சகல வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டன.

1931-க்கும் 1943-க்கும் இடைப்பட்ட 12 வருட காலத்தில் மட்டும் இத்தகைய குடியேற்றத் திட்டங்களுக்காக 14 3/4 மில்லியன் ரூபாவரை செலவழிக்கப் பட்டது.

சிங்களக் குடியேற்றத் திட்டத்திற்கு உள்ளாக்கப்பட்ட பெரும் பகுதி நிலங்கள் ஏற்கனவே வன்னியச் சிற்றரசர்களுக்கு உரித்துடையதாக இருந்த நிலங்களாகும். இந்த அரசர்களுடைய ஆட்சிக் காலத்தில் நிலம் வாங்கும் உரிமை அல்லது நிலத்தை சொந்தமாக வைத்திருக்கும் உரிமை மக்களுக்கு மறுக்கப்பட்டதால் அந்த நிலங்கள், அந்த மன்னர்களின் வீழ்ச்சியோடு காலனி அரசின் உடைமையாகிவிட்டன.

இது டி.எஸ் சேனநாயக்காவின் திட்ட மிட்ட சிங்களக் குடியேற்றத்துக்கு பெரும் வசதியாக அமைந்து விட்டது. இந்த திட்டமிட்ட குடியேற்றத்தினால் தமிழர் தாயகம் எந்தளவுக்கு சிங்களவர்களால் திட்டமிட்டு ஆக்கிரமிக்கப்பட்டது என்பதற்கு கீழ் வரும் அட்டவணை சிறந்த உதாரணமாகும்.

**ஆங்கிலேயர்கள் மலேசியாவில் ரப்பர் தோட்டங்களை வாங்குவதற்கும் பிரித்தானிய தோட்டங்களில் உயர் அதிகாரிகளாக வேலை செய்வதற்கும் யாழ்ப்பாண மேட்டுக் குடியினரை அனுப்பி வைத்தன் மூலம் அவர்களது அதிருப்தியை போக்கடித்தனர்.**

திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத் திட்டத்தின் தாக்கத்தை உணருவதற்கு கந்தளாய் கிராமம் சிறந்த ஒரு உதாரணமாகும். 1901-ம் ஆண்டு இந்தக் கிராமத்தின் மொத்தச் சனத்தொகை 156 பேராகும். இதில் 79 பேர் தமிழர்கள். 55 பேர் இஸ்லாமியர்கள். 16 பேர் சிங்களவர்கள். - இந்த 16 பேரும் தொழிலுக்காக அங்கு வந்து தற்காலிகமாக குடியேறியவர்களாக இருந்தனர். 1921-ம் ஆண்டு அங்கு ஒரே ஒரு சிங்களவர் மட்டும்தான் இருந்துள்ளார்.

ஆனால் 1981-ம் ஆண்டு கந்தளாயின் மொத்தச் சனத்தொகை 37600 பேராகும். இதில் 31,206 பேர் சிங்களவர்களாவர். 4323 பேர் இஸ்லாமியர்கள். 2001 பேரே தமிழர்களாவர்.

வரலாற்றின் தொடக்க காலத்திலிருந்தே தமிழர்களின் பாரம்பரிய பிரதேசமாக இருந்த அந்தக் கிராமத்தில் இன்று தமிழர்கள் மிக மிகச் சிறுபான்மையினராக சிங்களவர்களுக்கு அஞ்சி அடங்கி வாழ வேண்டிய நிலையே உள்ளது.

அக் காலத்தில் இருந்த தமிழ் தலைவர்கள் இக் குடியேற்ற அபாயத்தைப் பற்றி பெரிதாகக் கவலைப்படவில்லை. அவர்களுடைய கவலையெல்லாம் 'அமைச்சரவையில் தமக்கு இடந் தரப்படவில்லை' என்பதாகவே இருந்தது.

ஆங்கிலேயர்கள், தமிழ் தலைவர்களின் நெற்றியில் பட்டை நாமம் போட்டுவிட்டு அவர்களை தடவிக் கொடுக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.


மலேசியாவில் ரப்பர் தோட்டங்களை வாங்குவதற்கும் ஏற்கனவே இருந்த பிரித்தானிய தோட்டங்களில் உயர் அதிகாரிகளாக வேலை செய்வதற்கும் யாழ்ப்பாண மேட்டுக் குடியினரை அனுப்பி வைத்ததன் மூலம் அவர்களது அதிருப்தியை போக்கடித்தனர்.

உள் நாட்டிலும் சிற்றூழியர் தரத்திலான அதிகளவு வேலை வாய்ப்பை அவர்களுக்கு வழங்கியதன் மூலமும் அவர்களை சமாதானப்படுத்தினர்.

1935-ம் ஆண்டு யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த தேசாதிபதி சேர் எட்வேட் ஸ்ரப்ஸ் பருத்தித்துறையில் பேசிய கூட்டத்தில் 'இந் நாட்டின் நல்லாட்சிக்கு தமிழரின் மூளைத்திறனும், சுறுசுறுப்பான அவர்களின் உழைப்பும் கடந்த காலங்களில் மிகவும் பயனுள்ளதாக அமைந்தது. அதேபோல எதிர் காலத்திலும் இவர்கள் விலைமதிக்க முடியாத பங்கை ஆற்றுவர். நாட்டின் நல்லாட்சிக்கு பிரித்தானியர்கள் எப்போதும் தமிழரின் ஒத்தாசையை வேண்டி நிற்பர்" என்று கூறியபோது தமிழரின் மனமெல்லாம் குளிர்ந்து விட்டது.

அவர்கள் முன்னரை விட இன்னும் அதிகளவுக்கு எசமான விசுவாசிகளாக மாறத் தலைப்பட்டனர்.

**- நக்கீரன்**




# டி.எஸ். சேனநாயக்காவின் பிரதேச ஆக்கிரமிப்புத் திட்டம்

**1932 தேர்தலோடு யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் செயலிழந்து விட்டது. அதற்குப் புத்துயிரளித்து அதை ஒரு தேசிய விடுதலை இயக்கமாக நடத்துவதற்கு, அதன் தலைவர்கள் நம்பியிருந்ததுபோல் சிங்களத் தலைவர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கவில்லை. அவர்கள் காலைவாரிவிட்டதால் இவர்கள் குப்புற விழுந்து விட்டார்கள்.**

## திருகோணமலை மாவட்ட மக்கள் தொகை:

| வருடம் | தமிழர் | முஸ்லீம்கள் | சிங்களவர் |
|---|---|---|---|
| 1827 | 15663 (81.8%) | 3,245 (16.9) | 250 (1.3) |
| 1901 | 17117 (60%) | 8.258 (29%) | 1203 (4.2) |
| 1921 | 18586 (54.5%) | 12846 (37.7%) | 1501 (4.4) |
| 1946 | 33795 (44.5%) | 23,219 (30.6%) | 11606 (15.3) |
| 1981 | 93510 (36.4%) | 74403 (29%) | 86341 (33.6) |